C.S.I. TAMIL PARISH AL AIN, UAE
தென்னிந்திய தமிழ் திருச்சபை அல் அய்ன்

# மன்னா..

பொழிவு : 18 | MARCH 2026 | ஆகாரம் : 03



**கர்த்தர்**
நித்தமும் உன்னை
**நடத்தி,**
**மகா வறட்சியான**
**காலங்களில்**
உன் ஆத்துமாவைத் திருப்தியாக்கி,
**உன் எலும்புகளை**
**நிணமுள்ளதாக்குவார்.**

*ஏசாயா 58:11*

# UPCOMING EVENTS

**All Sun Mar '26** — Sunday
5:00 pm
### OUT REACH MINISTRY - CAMP
C.S.I. TAMIL PARISH AL AIN, UAE

**14 Mar '26** — Saturday
7:30pm - 09:30pm
### WOMENS FELLOWSHIP SERVICE
Evangelical Church Campus
Kanad hospital - Al Ain

**28 Mar '26** — Saturday
7:30pm - 09:30pm
### PALM SUNDAY SERVICE
Evangelical Church Campus
Kanad hospital - Al Ain

**28 Mar '26** — Saturday
9:30 pm
### BIBLE QUIZ - PROVERBS
C.S.I. TAMIL PARISH AL AIN, UAE

**All Sat Mar '26** — Saturday
6:30 pm
### CHILDREN BIBLE SCHOOL
C.S.I. TAMIL PARISH AL AIN, UAE

**07 21 Mar '26** — Tuesday
7:30 pm
### HOLY COMMUNION SERVICE
Church Members Home

**All Wed Mar '26** — Wednesday
7:30 pm
### BIBLE STUDY & PRAYER
Parsonage - C.S.I. Tamil Parish
Alain

**16 21 Mar '26** — VBS 2026
TBC
### VACATION BIBLE SCHOOL
C.S.I. TAMIL PARISH AL AIN, UAE

**31 Mar '26** — Tuesday
11:30 pm
### MONTH END SERVICE
Parsonage - C.S.I. Tamil Parish
Alain

**Daily Mrng** — Everyday
6:00am to 6:30am
### 40 DAYS LENT DAILY SERVICE
via - Zoom Online Meeting




**அன்பிற்கினியவர்களே, ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் திருப்பெயரில் அனைவருக்கும் நல்வாழ்த்துக்கள்**

அன்பிற்கினியவர்களே, ஒவ்வொரு ஆண்டும் மார்ச் மாதத்தின் முதல் வெள்ளிக்கிழமை (இந்த ஆண்டு—06.03.26) அன்று அகில உலக அமைதிக்கான ஜெப நாள் **(WORLD DAY OF PRAYER FOR PEACE)** என கடைபிடிக்கப்படுகிறது.இந்நாள் உலக அமைதி மற்றும் சமூக நீதிக்காக ஜெபித்திட 170 க்கும் மேற்பட்ட நாடுகளில் உள்ள மக்களை ஒன்றிணைக்கிறது.

அனைத்து உலக பெண்கள் தினம் **(INTERNATIONAL WOMEN'S DAY)** என மார்ச் எட்டாம் தேதியை 1975 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபை அதிகாரப்பூர்வமாக அங்கீகரித்தது. இந்நாளில் பெண்களின் சம உரிமை, பாலினப் பாகுபாடுகளைக் களைதல், பெண்களின் சாதனைகளைக் கொண்டாடுதல் எனப் பல நிலைகளில் கடைபிடிக்கப்படுகிறது.

பெண்களில் அநேகர் சோதனைகளை சாதனைகள் ஆக்கிய பல நிகழ்வுகள் உள்ளன. அவற்றுள் கடந்த 2025 ஆம் ஆண்டு நடந்த பெண்கள் உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டியின் அரையிறுதிப் போட்டியில் இந்தியா—ஆஸ்திரேலியா இடையேயான அரையிறுதிப் போட்டியில் இந்தியாவின் விளையாட்டு வீராங்கனை ஜெமிமா ரோட்ரிக் இந்தியாவை வெற்றி பெறச் செய்து கூறியது, நான் இயேசுவுக்கு நன்றி சொல்லுகிறேன் என்றும், "கர்த்தர் உங்களுக்காக யுத்தம் பண்ணுவார், நீங்கள் சும்மாயிருப்பீர்கள்" (யாத்திராகமம் 14:14) என்ற வசனத்தையும் குறிப்பிட்டுக் கூறினார். அன்பானவர்களே, பெண்களின் சாதனைகள் திருமறை உள்ளேயும், வெளியேயும், சமூகத்திலும் ஆண்டவரது கிருபையால் பெரிதும் நிகழ்ந்து கொண்டே இருக்கிறது ஆண்டவர் இயேசுவுக்கு நன்றி செலுத்துவோம்.

### உண்மையான உபவாசம்:

விடுதலை வாழ்வளித்து, அமைதியுடன் வாழ்வதும் (ஏசாயா 58:6) உணவைப் பகிர்வதும், சிறுமையானவர்களை சேர்த்துக் கொள்வதும், ஆடைகளை தேவையில் உள்ளவர்களுக்கு அளிப்பதும், உன் அயலகத்தாருடன் அன்புடன் வாழ்வதுமே (ஏசாயா 58:7) உண்மையான உபவாசம் என்று ஏசாயா தீர்க்கர் வழியாக கர்த்தர் உரைக்கிறார். அப்பொழுது விடியற்கால வெளுப்பைப் போல் வெளிச்சம் நம்மில் உதித்து,கர்த்தருடைய மகிமை நம்மைப் பாதுகாக்கும் (ஏசாயா 58:8) என்று கர்த்தர் கூறுகிறார். பிரியமானவர்களே, உபவாசக் காலமாம் இந்த நாட்களில் பொருள் பொதிந்த நோன்பை நாம் கடைபிடிப்போம். அப்போது நமக்கு ஆண்டவர் இயேசுவின் அருள் நிறைந்த வாழ்வு கிடைத்திடும்.

### இறைவரின் ஆசிர்:

கர்த்தர் தயவாய் தந்திருக்கிற இந்த நோன்பு நாட்களில் ஆண்டவர் கற்றுத் தந்திருக்கிற வழியில் நடக்கும் போது,நமது வேண்டுதல் கேட்கப்படும் பதில் கிடைத்திடும் (ஏசாயா 58:9,10). கர்த்தர் தினந்தோறும் நம்மை வழி நடத்தி, வறண்ட சூழலிலும் நிறைவளிப்பார், எலும்புகளையும் வலிமையாக்குவார், வாழ்வு செழிப்பாக வளம் மிக்கதாக அமைந்திடும் (ஏசாயா 58:11). இம்மாதம் 28.3.26 — அன்று குருத்தோலை ஞாயிறு **(PALM SUNDAY)** என்றும் பாடுகளின் ஞாயிறு என்றும் அழைக்கப்படுகிறது. ஆண்டவர் இயேசு எருசலேம் நகருக்குள் வெற்றி பவனியாக கழுதையின் மீது அமர்ந்தவராக தாழ்மையின் தோற்றத்தை வெளிப்படுத்தி சென்ற பயணம் இது. இந்தப் பயணம் பலிக்கான பயணம். தபசு நாட்களாம் இந்த உபவாசக் காலத்தில் நோன்பின் உண்மைத் தன்மையை உணர்ந்து,ஆண்டவர் இயேசுவின் பாதத்தில் அமர்ந்து,ஆண்டவரின் திருவடிகளைப் பின்பற்றி பயணிப்போம், ஆண்டவர் இயேசு கிறிஸ்து தாமே ஆசீர்வதிப்பாராக, ஆமென்.

இறைப்பணியில்,

ஆயர்.

Rev. S.Baktha Thiyagarajan

# இயேசுவின் அன்பு



- அளந்து பார்க்க முடியாத அளவிலா அன்பு!
- ஆழியைக் காட்டிலும் ஆழமான அன்பு!
- மலைகளைக் காட்டிலும் உயரமான அன்பு!
- குப்பையில் உள்ளோரை கோபுரத்தில் உயர்த்தும் அன்பு!
- கண்கள் கலங்கும் போது துணையாக நிற்கும் அன்பு!
- கலங்கரை விளக்காக வழி காட்டும் அன்பு!
- தவிக்கின்ற போது திசை காட்டும் அன்பு!
- திருந்திடா பாவிக்காய் அழுகின்ற அன்பு!
- வருந்திடா பிள்ளைக்காய் கலங்குகின்ற அன்பு!
- வாடி நின்ற பிள்ளையை தேடி ஆற்றும் அன்பு!
- பாவி எனக்காய் பாவத்தை ஏற்ற அன்பு!
- புறம்பேத் தள்ளாத பூரண அன்பு!
- பிரியாதது உம் பரிவான அன்பு!
- ஒடுக்கப்பட்டோரை உயர்த்திப் பார்க்கும் அன்பு!
- குழியில் உள்ளவரை குனிந்து தூக்கும் அன்பு!
- உள்ளம் உடையும்போது உறவாய் நிற்கும் அன்பு!
- சிறந்தவர் எல்லாம் இருக்க தரம் இழந்த என்னைத் தேடி வந்த அன்பு!
- நினைக்காத அதிசயங்களைச் செய்து என்னை மகிழ்விக்கும் அன்பு!
- பாலூட்டும் தாய் மறந்தாலும் நான் உன்னை மறவேன் என்ற அன்பு!
- ஏற்ற வேளையில் உம் வார்த்தையை தந்து அரவணைத்த அன்பு!
- சோர்ந்திட்ட வேளையில் தம் கிருபையினால் விழுந்திடாமல் காத்த அன்பு!
- ஆறுதல் இன்றி தவித்த போது ஆறுதல் தந்து அணைத்த அன்பு!
- எண்ணிலடங்கா நன்மைகளை எனக்கு அளித்த அன்பு!
- வீண் பெருமையை நான் கொண்டதால் முள்முடியைத் தம் தலையில் ஏற்ற அன்பு!
- என் பாவம் கழுவிட தம் தூய இரத்தத்தை சிந்தின அன்பு!
- என் உள்ளம் தீட்டுக்கொண்டதால் தம் விலாவில் காயம் ஏற்ற அன்பு!
- என் கரங்களில் பாவம் செய்ததால்,தம் கரங்களில் காயம் ஏற்ற அன்பு!
- தீய வழிதனில் என் கால்கள் சென்றதால் தம் கால்களில் காயம் ஏற்ற அன்பு!
- என்னுடன் இருக்க,என்னில் அன்பு செலுத்த மீண்டும் உயிர்த்த அன்பு!
- உம் அன்பை நினைக்கும் போது உள்ளம் உருகுதய்யா,கண்கள் கலங்குதையா பாவியான மனுக் குலத்தின் மீது இவ்வளவு அன்பா!
- என் மீது எவ்வளவு அன்பு உமக்கு,எனக்காக உம்மையேத் தந்தீரே!
- சத்திய வேதத்தின் நித்தியக் கர்த்தரே, உம்மையே நம்புவேன். இன்னும் உம்மை கிட்டி நெருங்கி, உம்மிலும், பிறரிலும் அன்பு கூறுவேன்.

> நான் உங்களில் அன்பாயிருந்தது போல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள் (யோவான் 13:34)

இறைப்பணியில்,
ஆயரம்மா
*Mrs . P . Velanganni*



# செயலர் மடல்

பிரியமான திருச்சபை மக்கள் அனைவருக்கும் அன்பின் வாழ்த்துக்கள் கடந்த மாதம் முழுதும் தேவன் நம்மை பாதுகாத்து வழிநடத்தி வந்ததற்காக நன்றி செலுத்துவோம் அவரின் பாதுகாப்பின் கரம் நம்மோடு இருப்பதற்காகவும் நம் குடும்பத்தை இந்த தேசத்தைபாதுகாத்து வழி நடத்தி வருகிற மட்டில்லா கிருபைக்காக நன்றி செலுத்துவோம். இந்த நோன்பு காலத்தில் திருச்சபை மக்கள் அனைவரும் அனுதின தியானத்தில், பெறுவதற்காக நன்றி செலுத்துகிறோம். இந்த வளைகுடா பகுதியில்ஏற்பட்டிருக்கும் சாதாரன சூழ்நிலைகள் மாற எல்லாம் வல்ல இறைவனை வேண்டிக் கொள்வோம். வரப்போகிற நாட்களில் நடைபெறப் போகிற விடுமுறை வேதாகம பள்ளிக்காக ஜெபித்துக் கொள்ளவும். நன்றி

**கர்த்தர் நித்தமும் உன்னை நடத்தி, மகா வறட்சியான காலங்களில் உன் ஆத்துமாவைத் திருப்தியாக்கி, உன் எலும்புகளை நிணமுள்ளதாக்குவார்." – ஏசாயா 58:11**

## நித்தியமாக நடத்தும் தேவன்

இந்த வசனம் நமக்கு மிகுந்த நம்பிக்கையை அளிக்கிறது. வாழ்க்கை எப்போதும் எளிதாக இருக்காது. சில சமயம் குழப்பம், பயம், நிச்சயமின்மை நம்மை சூழலாம். ஆனால் "நித்தமும்" என்ற வார்த்தை மிக முக்கியம். அது தேவன் ஒரு காலத்திற்கு மட்டும் அல்ல, எல்லா காலங்களிலும் நம்மை நடத்துகிறார் என்பதைக் கூறுகிறது. நாம் பாதையைப் பார்க்க முடியாவிட்டாலும், அவர் வழியை அறிவார். நாம் பலவீனமாக இருந்தாலும், அவர் பலமானவர்.

## வறட்சியில் திருப்தி

"மகா வறட்சியான காலங்களில்" என்பது வாழ்க்கையின் கடினமான நேரங்களை குறிக்கிறது. பொருளாதார சிரமம், உடல்நல பிரச்சினை, மனஅழுத்தம், உறவு சிக்கல் – இவை எல்லாம் வறட்சி காலங்கள். ஆனால் அந்த நேரங்களில் கூட தேவன் நம் ஆத்துமாவை திருப்தியாக்குகிறார். வெளியில் பிரச்சினை இருந்தாலும், உள்ளத்தில் சமாதானம் கொடுக்கிறார். உலகம் தர முடியாத அமைதியை அவர் அளிக்கிறார்.

## பலவீனத்தில் பலம்

"உன் எலும்புகளை நிணமுள்ளதாக்குவார்" என்பது முழுமையான புதுப்பிப்பை குறிக்கிறது. நாம் சோர்ந்து போகும் நேரங்களில், தேவன் நம்மை உள்ளிருந்து பலப்படுத்துகிறார். அவர் நம் விசுவாசத்தை உறுதிப்படுத்துகிறார். அவரை நம்பி நடக்கும் வாழ்க்கை பசுமையான தோட்டம் போல இருக்கும். தேவனின் கிருபை நம்மை மட்டுமல்ல, நம்மை சுற்றியுள்ளவர்களையும் ஆசீர்வதிக்கும்.

## முடிவு

ஏசாயா 58:11 ஒரு வாக்குத்தத்தம்.

- கர்த்தர் நம்மை நடத்துவார்.
- வறட்சியில் திருப்தி அளிப்பார்.
- பலவீனத்தில் பலப்படுத்துவார்.
- எந்த சூழ்நிலையிலும் அவரை நம்பி முன்னேறுவோம். அவர் நம்மை ஒருபோதும் கைவிடமாட்டார்.

இறைப் பணியில்

Mr. Santhosh Kumar

திருச்சபைச் செயலர்

# இரட்சிக்கப்பட்ட நமக்கு மனந்திரும்புதல் அவசியமா?

மத்தேயு 3, ரோமர் 8:14, எபிரேயர் 3:4,6,10, 1கொரிந்தியர் 4:6,13

நம்முடைய பிதாவாகிய தேவனாலும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும் உங்களுக்கு கிருபையும் சமாதானமும் பெருகக்கடவது. இயேசுவை கர்த்தரென்று விசுவாசித்து அவர் ஒருவரே நம்முடைய பாவத்தை மன்னித்தார் என்று தன் வாயினாலே அறிக்கையிட்டு, நம்முடைய இருதயத்திலே மாற்றத்தை அடைந்திருக்கிற நாம் ஆவியின் படி நடக்கிறவர்களாக காணப்பட வேண்டும் ரோமர் 8:1, இப்படியாக கூறுகிறது. ஆனபடியால், கிறிஸ்து இயேசுவுக்குட் பட்டவர்களாயிருந்து, மாம்சத்தின்படி நடவாமல் ஆவியின்படியே நடக்கிறவர்களுக்கு ஆக்கினைத்-தீர்ப்பில்லை என்று வேதம் சொல்கிறது.

காரியம் இப்படியாக இருப்பதினால் சபை கூடிவருதலைச் சிலர் விட்டுவிடுகிறதுபோல நாமும் விட்டுவிடாமல், ஒருவருக்கொருவர் புத்திசொல்லக்கடவோம்; நாளானது அவ்வளவாய்ப் சமீபித்துவருகிறதை எவ்வளவாய்ப் பார்க்கிறீர்களோ புத்திசொல்லவேண்டும். சத்தியத்தை அறியும் அறிவை அடைந்தபின்பு நாம் மனப்பூர்வமாய்ப் பாவஞ்செய்கிறவர்களாயிருந்தால், பாவங்களினிமித்தம் செலுத்தத்தக்க வேறொருபலி இனியிராமல், நியாயத்தீர்ப்பு வருமென்று பயத்தோடே எதிர்பார்க்குதலும், விரோதிகளைப் பட்சிக்கும் கோபாக்கினையுமே இருக்கும். மேலும் சகோதரரே, ஜீவனுள்ள தேவனைவிட்டு விலகுவதற்கேதுவான அவிசுவாசமுள்ள பொல்லாத இருதயம் உங்களிலொருவனுக்குள்ளும் இராதபடிக்கு நீங்கள் எச்சரிக்கையாயிருக்கவேண்டும். உங்களில் ஒருவனாகிலும் பாவத்தின் வஞ்சனையினாலே கடினப்பட்டுப் போகாதபடிக்கு, இன்று என்னப்படுமளவும் நாடோறும் ஒருவருக்கொருவர் புத்திசொல்லி கீழப்படியவேண்டும்.

நாம் கொண்ட ஆரம்பத்திலே உறுதியாய்ப்பற்றிக் கொண்டிருப்போமாகில், நம்பிக்கையை முடிவுபரியந்தம் கிறிஸ்துவினிடத்தில் பங்குள்ளவர்களாயிருப்போம். ஆனபடியினாலே, அவருடைய இளைப்பாறுதலில் பிரவேசிப்பதற்கேதுவான வாக்குத்தத்தம் நமக்குண்டாயிருக்க, உங்களில் ஒருவனும் அதை அடையாமல் பின்வாங்கிப்போனவனாகக் காணப்படாதபடிக்குப் பயந்திருக்கக்கடவோம். ஆகையால், அந்தத் திருஷ்டாந்தத்தின்படி, ஒருவனாகிலும் கீழ்ப்படியாமையினாலே விழுந்துபோகாதபடிக்கு, நாம் இந்த இளைப்பாறுதலில் பிரவேசிக்க ஜாக்கிரதையாயிருக்க வேண்டும். பரலோக ராஜ்யம் சமீபமாயிருப்பதினாலும் இயேசு கிறிஸ்துவின் வருகை சீக்கிரமாயிருப்பதினாலும் நம்மை நாம் காத்துக்கொள்ளவேண்டும்.

ஏன் நான் மனந்திரும்ப வேண்டும். நான் கிறிஸ்துவை என் சொந்த ரட்சகராக ஏற்று கொண்டேன். நான் பரலோகம் சென்று விடுவேன் .என்னை விட தவறு செய்கிறவர்கள் நன்றாயிருக்கிறார்கள் என்று தங்களை தாங்களே வஞ்சித்து தன் இருதயத்தில் சிந்தித்துக்கொண்டு தானும் தவறு செய்து சிக்கி தவித்து இருதய கடினத்தோடு வாழ்ந்துகொண்டிருக்கிறவர்

அநேகர். இவர்கள்தான் பதர். யோவான் ஸ்நானன் இப்படியாக கூறுகிறார். மனந்திரும்புதலுக்கு ஏற்ற கனிகளைக் கொடுங்கள் இப்பொழுதே கோடரியானது மரங்களின் வேர் அருகே வைத்திருக்கிறது. ஆகையால் நல்ல கனிகொடாத மரமெல்லாம் வெட்டுண்டு அக்கினியிலே போடப்படும். மனந்திரும்புதலுக்கென்று நான் ஜலத்தினால் உங்களுக்கு ஞானஸ்நானம் கொடுக்கிறேன்; எனக்குப்பின் வருகிறவர் என்னிலும் வல்லவராயிருக்கிறார், அவருடைய பாதரட்சைகளைச் சுமக்கிறதற்கு நான் பாத்திரன் அல்ல; அவர் பரிசுத்த ஆவியினாலும் அக்கினியினாலும் ஞானஸ்நானம் கொடுப்பார். தூற்றுக்கூடை அவர் கையில் இருக்கிறது; அவர் தமது களத்தை நன்றாய் விளக்கி, தமது கோதுமையைக் களஞ்சியத்தில் சேர்ப்பார்; பதரையோ அவியாத அக்கினியினால் சுட்டெரிப்பார் என்றான். கோதுமையாய் விளங்க மனந்திருபுதலுக்கேற்ற கனியை நம்மிடத்தில் ஆண்டவர் காணவேண்டும் அக்கினியில் ஞானஸ்நானம் கொடுக்க நியாதிபதியாய் என் ஆண்டவர் வரும்பொழுது யார் கோதுமைமணியோ என்று அக்கினி பரிசோதிக்கும் ஏனென்றால் தேவனுடைய ராஜ்யம் நீதியும் சமாதானமும் பரிசுத்த ஆவியினாலுண்டாகும் சந்தோஷமுமாயிருக்கிறது.

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் கிருபையும், தேவனின் அன்பும், பரிசுத்த ஆவியானவரின் ஐக்கியமும் நம் அனைவரோடும் இருப்பதாக ஆமேன்

**"இன்றே இரட்சணிய நாள் இன்றே அநுக்கிரக காலம்"**

Article by

**MR. HERCHIL HARISH**

Men's Fellowship



# தேவன் பயன்படுத்திய தைரியமான பெண்



### பின்னணி

எஸ்தர் ஒரு சாதாரண பெண்ணாக இருந்தாலும், தேவன் அவளை ஒரு பெரிய நோக்கத்திற்காக வைத்தார். அவள் அநாதையாக இருந்தாள்; மொர்தெகாய் அவளை வளர்த்தார்

### தேவனின் கிருபை மற்றும் உயர்வு

எஸ்தர் தேவனை நம்பியதால், அவள் ராஜாவுக்கு முன்பாக ராணியாக உயர்ந்தாள். ஏஸ்தர் 2:15 – "எஸ்தருக்கு தன்னை காண்கிற எல்லாருடைய கண்களிலும் தயை கிடைத்தது." தேவனில் நம்பிக்கை வைத்தவர்களுக்கு அவர் கிருபையும் உயர்வும் தருகிறார்.

### தாழ்மை மற்றும் சமூக பங்கு

எஸ்தர் உயர்ந்த பதவியில் இருந்தாலும் தாழ்மையுடன் வாழ்ந்தாள், தனது ஜனத்தை மறக்கவில்லை. தேவன் ஒவ்வொரு பெண்ணையும் ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்காக வைத்திருக்கிறார். குடும்பம், சபை, மற்றும் சமூகம் எல்லாவற்றிலும் நமக்கு ஒரு பங்கு இருக்கிறது.

### தைரியமும், ஜெபமும்

எஸ்தர் பயந்தாலும், தேவனை நம்பி தைரியமாக முடிவு செய்தாள். ஏஸ்தர் 4:16 – "நான் செத்தாலும் சாகிறேன் என்று சொல்லச் சொன்னாள்." ஜெபமும் உபவாசமும் அவளின் வாழ்க்கையில் முக்கிய பங்கு வகித்தன. பெண்கள் வாழ்கையில் சோதனைகள் வந்தாலும் தேவனை நம்பி தைரியமாக நிற்கவேண்டும். எஸ்தர் உபவாசத்தோடும் அலறுதலோடும் ஜெபம் பண்ணினாள். ஏஸ்தர் 9:30. தேவன் அவளை அதன் மூலம் வழிநடத்தினார்.

எஸ்தர் போல நாமும்:

- ஜெபிக்கும் பெண்களாக
- தாழ்மையானவர்களாக
- தைரியமானவர்களாக
- தேவனுடைய சித்தத்திற்கு கீழ்படிந்து இருக்கிறவர்களாக

நாமும் சபைக்காகவும், குடும்பத்திற்காகவும், ஜெபித்து நின்றால், தேவன் பெரிய காரியங்களை செய்வார். ஆமென்.

> When the turn came for Esther (the young woman Mordecai had adopted, the daughter of his uncle Abihail) to go to the king, she asked for nothing other than what Hegai, the king's eunuch who was in charge of the harem, suggested. And Esther won the favor of everyone who saw her.

Article by

**MRS. GOLD JENCY STANLY**

Women's Fellowship

# ஆவிக்குரிய முறையில் நாளைத் தொடங்குதல்



இயேசு கிறிஸ்துவின் திருப்பெயரில் அனைவருக்கும் அன்பின் வாழ்த்துக்கள். ஆவிக்குரிய வழியில் ஒரு நாளைத் துவங்குவது எப்படி?

- தினமும் வேதாகமத்தை வாசித்தல்.
- இடைவிடாமல் ஜெபம் செய்தல்
- ஆண்டவரை பிரதிபலித்தல்
- ஆண்டவரை மகிமைப்படுத்துதல்

நாம் அனைவரும் வேதாகமத்தை படிக்க வேண்டும் என்றே விரும்புகிறோம். ஆனால் பிசாசானவன் நம்மை உலகக் காரியங்களின் நிமித்தம் திசை திருப்புகிறான். வேதாகமம் இப்படிச் சொல்லுகிறது, “தேவனுக்கு கீழ்ப்படிந்திருங்கள், பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள்; அப்பொழுது அவன் உங்களை விட்டு ஓடிப் போவான்” -யாக்கோபு 4:7.

நம்முடைய தினசரி வாழ்வில், நாம் படிக்கும் இடத்தில், வேலை பார்க்கும் இடத்தில் வீட்டில் நம்மோடு இருப்பவர்களுக்கு உதவியாக ஆசீர்வாதமாக இருக்க வேண்டும் என்று கர்த்தர் விரும்புகிறார். “தேவனிடத்தில் விசுவாசமானவர்கள் நற்கிரியைகளைச் செய்ய ஜாக்கிரதையாய் இருக்க வேண்டும், இவைகளே மனுஷருக்குப் பிரயோஜனமானவைகள்” தீத்து 3:8. அதிகாலையில் ஜெபம் செய்வது, அந்த நாள் முழுவதற்குமான உற்சாகம், அமைதி, வலிமையைத்தருகிறது. ஆண்டவருக்கு முன்பாக நம்மைத் தாழ்த்தும் போது, அவர் நம்மை பெலப்படுத்துவார். “இடைவிடாமல் ஜெபம் பண்ணுங்கள்” -1தெச 5:17. எனவே, ஆண்டவரே இந்த நாள் முழுவதும், எனது நடக்கையில், பேச்சில், சிந்தனையில், ஆசை, வாஞ்சைகளில் உம்முடைய திருப்பெயர் மட்டும் மகிமைப்படும்படியான கிருபையை தந்தருளும் என்று ஜெபிப்போம். அன்றாட வாழ்வில் நம்முடைய செயல்பாடுகள் நம் ஆண்டவரை பிரதிபலிப்பதாகவும், மகிமைப்படுத்துவதாகவும் இருக்க வேண்டும். “மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு, பரலோகத்தில் இருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி, உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக்கடவது” -மத்தேயு 5:16.

சங்கீதம்-119:165 திருவார்த்தைக் கூறுவது, “உம்முடைய வேதத்தை நேசிக்கிறவர்களுக்கு மிகுந்த சமாதானமுண்டு, அவர்களுக்கு இடறலில்லை”. வேதத்தை நேசிப்போம், தினந்தோறும் வாசிப்போம், தொடர்ந்து ஜெபிப்போம், அதன்படி செயல்படுவோம், சமாதானத்தோடு வாழ்வோம். ஆண்டவர் தாமே நம் ஒவ்வொருவரையும் ஆசீர்வதிப்பாராக, ஆமென்.

Article by
**MRS. MERCY THANGARAJ**
Youth Fellowship

# LESSONS FROM WOMEN IN THE BIBLE



RUTH
Loyalty unlocks destiny. Ruth 1:16



SARAH
Faith waits with strength.
Hebrews 11:11



HAGAR
God sees the forgotten.
Genesis 16:13



ESTHER
Courage changes everything.
Esther 4:14



HANNAH
Prayer makes the impossible possible.
1 Samuel 1:27



LEAH
Even the unseen are chosen.
Genesis 29:32



MARY
Obedience births. miracles.
Luke 1:38



ABIGAIL
Humility silences destruction.
1 Samuel 25:33



RAHAB
Your past can't cancel your future.
Hebrews 11:31

# Rebekah

Character Study Notes

**Scripture**

Genesis 24–27

*Faithful Obedience*

## Study Questions

- How did Rebekah demonstrate faith in agreeing to marry Isaac?
- What were the consequences of Rebekah's favoritism toward Jacob?
- How does Rebekah's story reveal the importance of trusting God's plans over our own?

## What Was She Known For?

Rebekah was the wife of Isaac and the mother of twins, Jacob and Esau. She showed great faith in leaving her family to marry Isaac but later faced challenges due to favoritism and deception.

## Her Strengths

- Faith in God's plan for her marriage to Isaac
- Hospitality and kindness toward Abraham's servant
- Quick decision-making in moments of uncertainty

## Lessons Learned from Her Story

- Trusting God's guidance can lead to extraordinary blessings.
- Favoritism and manipulation can have lasting consequences.
- God's plans are fulfilled despite human flaws and mistakes.

Character Study Notes

# Sarah

**Trust God's Timing!**

## Scripture

Genesis 11–23

## Study Questions

- How did Sarah show both faith and doubt in God's promise to her?
- What role did Sarah play in God's covenant with Abraham?
- What can we learn from Sarah's story about waiting on God's timing?

## What Was She Known For?

Sarah, the wife of Abraham, was the mother of Isaac, born in her old age as a fulfillment of God's promise to make Abraham the father of nations.

## Her Strengths

- Faith in God's promise, despite her initial doubts
- Resilience through trials and uncertainties
- Dedication to her family and God's covenant

## Lessons Learned from Her Story

- God's promises are fulfilled in His perfect timing, not ours.
- Even in moments of doubt, God remains faithful.
- Patience and trust are key in the waiting season.

# KINDER

**TEACHER – MRS. ROSELIN BALAJI**



1. *BEN JONATHAN*
2. *SHIPHRAH SHALOM*
3. *MERAJ DANIEL*
4. *FERROZLIN JESI*
5. *BRISTON ISAC*

# BEGINNER
















**TEACHER** → **MRS. J. MONA PREM**

# JOB 1-12
# யோபு 1-12

1. ஒட்டகங்கள் மேல் விழுந்து ஓட்டிக்கொண்டு போனவர்கள் யார்?
௨. நாம் தீமையைப் பெற வேண்டாமோ என்று கேட்டது யார்?
3. என் கதறுதல் எப்படிப் போகிறது என்று யோபு கூறுகிறார்?
4. மனுஷன் தேவனைப் பார்க்கிலும் நீதிமானாய் இருப்பானோ எனக் கூறியது யார்?
௫. எவை உம்மோடே சமாதானமாய் இருக்கும்?
6. காட்டாறுபோல போல மோசம் பண்ணுகிறவர்கள் யார்?
7. எது காற்றை போல் இருக்கிறது?
8. தண்ணீர் இல்லாமல் கோரைப்புல் முளைக்குமோ?எங்கே?
9. வேகமாய் ஓடுகிறது எது?
10. என் ஆவியைக் காப்பாற்றினது எது என்று யோபு கூறுகிறார்?
11. புத்தி இல்லாத மனுஷன் எதற்கு ஒப்பாகப் பிறந்தவன்?
1௨. பூமியைக் கீழது மேலதாக்கும் எது?

## ஜனவரி-௨0௨6 மாத வினாவிற்கான விடைகள்

1. எஸ் 1:16,19
௨. எஸ் ௨:14
3. எஸ் 3:9
4. எஸ் 4:16
௫. எஸ் ௫:10
6. எஸ் 6:1௨
7. எஸ் 7:9
8. எஸ் 8:9
9. எஸ் 9:௨9
10. எஸ் 10:3

## நவம்பர்-௨0௨௫ மாத வினாவிற்கான விடைகள் எழுதியவர்கள்

திருமதி. ஜெனிபர் பால்
திருமதி. பிப்ளின் நெல்சன்
திருமதி. ராதிகா செல்வக்குமார்
திருமதி. ஹேமலதா ஸ்டீபன்
திருமதி. ரோஸ்மேரி.

ஒவ்வொரு மாதமும் மன்னாவிற்கான விடைகள், அதின் அதிகாரம் மற்றும் வசனமும் குறிப்பிட்டு அம்மாதம் 1௫ம் தேதிக்கு முன் ஈமெயில் அல்லது வாட்சப் மூலமாக கீழ்கண்ட தலைப்பில் அனுப்பி வைக்கவும்.









# JANUARY Winners

## Cross Word

- ○ Sherinsha
- ○ Iniyal Evangeline
- ○ Iniyan Immanuel

## Find the Way

- ○ Sherinsha
- ○ Iniyan Immanuel
- ○ Iniyal Evangeline

## Kids Colouring

- ○ Shaana Liliya
- ○ Iniyan Immanuel
- ○ Iniyal Evangeline

## Word Search

- ○ Sherinsha
- ○ Iniyal Evangeline
- ○ Iniyan Immanuel

ஒவ்வொரு மாதமும் மன்னாவிற்கான விடைகள், அதின் அதிகாரம் மற்றும் வசனமும் குறிப்பிட்டு அம்மாதம் 20ம் தேதிக்கு முன் ஈமெயில் மூலமாக கீழ்கண்ட தலைப்பில் அனுப்பி வைக்கவும்.

You are encouraged to Complete the tasks given in Manna; and do please send to us; on or before 20th of every month, Email Subject shall be in the following format.

**Email Subject:** Your name / Quiz, type / Month - Year

**to Church Email:** csitcalain@gmail.com

மன்னாவிற்கான விடைகளை நீங்கள் எழுதி அனுப்பியிருந்தும், பிள்ளைகளின் பெயர் அல்லது உங்கள் பெயர் விடுபட்டிருந்தால் அதற்காக வருந்துகிறோம். தயவுகூர்ந்து உடனடியாக எங்களுக்கு தெரியப்படுத்தவும் அடுத்த மன்னாவில் அதை சரிசெய்து பதிவிட விரும்புகிறோம்.

Name:

Date:

Kids Coloring





# Lent Word Search

| | | | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| E | N | S | K | F | O | R | G | I | V | E | N | E | S | S | O | O | D | F | G |
| R | O | A | W | L | Y | K | E | R | U | S | L | O | R | Y | I | M | B | A | I |
| P | I | S | K | R | M | E | N | O | I | X | H | E | N | A | S | H | E | S | K |
| E | X | O | E | A | Y | K | A | R | S | S | O | R | C | D | W | A | T | T | R |
| N | B | L | E | S | A | L | N | I | K | A | L | K | E | Y | D | E | R | I | O |
| A | S | H | W | E | D | N | E | S | D | A | Y | O | D | T | U | D | F | N | S |
| N | E | M | Y | O | N | P | S | R | U | M | T | A | P | R | B | E | T | G | E |
| C | R | O | L | K | U | Y | I | E | A | S | H | P | G | O | O | D | L | A | T |
| E | R | A | O | V | S | O | R | K | C | R | U | C | I | F | I | X | I | O | N |
| D | I | S | H | I | M | K | S | L | E | M | R | E | M | B | I | P | E | R | O |
| O | S | A | M | F | L | P | A | O | D | F | S | I | L | A | E | R | N | K | I |
| C | J | E | R | O | A | S | C | G | O | O | D | F | R | I | D | A | Y | S | T |
| R | E | Y | A | R | P | E | R | A | M | R | A | D | E | A | W | S | I | S | C |
| U | R | S | P | E | D | R | I | L | A | T | Y | A | J | R | E | T | S | A | E |
| C | U | S | Y | L | E | C | F | E | L | S | O | P | E | G | O | E | Y | C | R |
| N | S | E | A | K | S | W | I | P | R | E | K | S | S | E | L | B | V | E | R |
| I | A | R | W | E | E | K | C | R | A | J | E | R | U | H | E | G | O | F | U |
| S | L | A | Y | A | R | T | E | B | O | S | D | I | S | C | I | P | L | E | S |
| H | E | S | A | C | T | M | O | W | S | U | R | H | O | L | P | A | N | K | E |
| A | M | B | P | E | N | R | E | I | M | E | C | N | A | T | N | E | P | E | R |

## Word Bank

| | | | |
|---|---|---|---|
| ASHES | DESERT | GOOD FRIDAY | PENANCE |
| ASH WEDNESDAY | DISCIPLES | HOLY THURSDAY | PRAYER |
| BETRAYAL | EASTER | HOLY WEEK | REPENTANCE |
| BLESS | FASTING | JERUSALEM | RESURRECTION |
| CROSS | FORGIVENESS | JESUS | RISEN |
| CRUCIFIXION | FORTY DAYS | PALM SUNDAY | SACRIFICE |

Name : ........................................................................


**WORD SEARCH**

# FIND THE WAY

Name : ..........................................................................


## Palm Sunday Maze

Start ↘



# CROSS WORD

Name : ..............................................................




__Across__

**2.** How many Days are there in Lent

**5.** What was Jesus tempted to turn a stone into?

**9.** On what day do we celebrate that Jesus rose from the dead?

**10.** In which river was Jesus Baptised?

**13.** On what day of the week did Jesus die?

**14.** What actions offend God

**15.** What is the Sunday before Easter called?

__Down__

**1.** What is the Prayer that Jesus taught us?

**3.** What is the word for giving up something that we like?

**4.** Who tempted Jesus

**6.** Where did Jesus go to pray

**7.** Fill In the blank: Jesus is God the .......

**8.** As well as giving up something and helping people, what else as we asked to do more of in Lent

**11.** Who looked after Jesus?

**12.** How many Old Testament Figures appeared with Jesus on the top of the mountain at His Transfiguration?

# MARCH - 2026

| | |
|---|---|
| 01-MARCH | Mr. David Livingston |
| 02-MARCH | Mrs. Shaly Jesie |
| 02-MARCH | Miss. T.P. Vamshi Juana |
| 03-MARCH | Mrs. Yesubai |
| 03-MARCH | Mrs. M. Subha Alvin |
| 03-MARCH | Mr. G. Verslin Benny |
| 04-MARCH | Miss. Samantha Baskar |
| 04-MARCH | Mr. K.G. Libin Raj |
| 06-MARCH | Mr. Derick Gasbath Joy |
| 06-MARCH | Mr. Hebin Jose George |
| 06-MARCH | Mr. Arul Raj |
| 12-MARCH | Mr. J. Jolly Abraham |
| 13-MARCH | Master. J. Joshua |
| 14-MARCH | Mrs. Radhika Grace Selva Kumar |
| 15-MARCH | Mrs. Eben A. Prasad |
| 17-MARCH | Mr. D.P. Joseph Jovin |
| 17-MARCH | Mrs. R. Jackulin Milka |
| 19-MARCH | Mr. A.S. Kannan |
| 19-MARCH | Mr. John Prabakaran |
| 20-MARCH | Mrs. Catherine Judith Franklin |

"For I know the plans I have for you," declares the Lord, "plans to prosper you and not to harm you, plans to give you hope and a future."

| | |
|---|---|
| 23-MARCH | Miss. U.S. Gabrilin Shasmitha |
| 23-MARCH | Mrs. Aji Kumari |
| 23-MARCH | Mrs. Velanganni |
| 24-MARCH | Mr. Ruban |
| 24-MARCH | Mr. P. Lifin Raj |
| 25-MARCH | Mrs. Rebecca |
| 25-MARCH | Mrs. B. Swetha |
| 25-MARCH | Baby. Tara Jaiswal |
| 27-MARCH | Master. Johan Sanjo |
| 27-MARCH | Master. Jeroan Stanly |
| 30-MARCH | Ms. Ajin Shah |
| 30-MARCH | Master. D.L. Derin |
| 31-MARCH | Ms. Annlin Sophia Nelson |
| 31-MARCH | Mr. David Livingston |

" With long life I will satisfy him and show him my salvation

-Psalm 91:16

"The Lord bless you and keep you; the Lord make his face shine on you and be gracious to you; the Lord turn his face toward you and give you peace."

## MARCH Wedding ANNIVERSARY


| | |
|---|---|
| 07-MAR | Mr. Ujin Raj & Mrs. Sangeetha |

"And over all these virtues put on love, which binds them all together in perfect unity." -Colossians 3:14



# International Women's Day

## 8th March




EDITOR
THE PRESBYTER - CSI TAMIL PARISH-ALAIN, UAE
TEL: +971 (3) 766 8353 | MOB: 056 7668 348
Email: csitcalain@gmail.com
Web: csitamilparishalain.org

STRICTLY FOR INTERNAL CIRCULATION ONLY